பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

25 04 2024 **THURSDAY** 7 15 **PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மக்களவை தேர்தலில் இரண்டாவது கட்ட வாக்குப்பதிவு நாளை நடைபெறவுள்ள 88 தொகுதிகளில் அனைத்து ஏற்பாடுகளும் தயார்நிலையில் உள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

2. அரசியல் கட்சிகளின் நட்சத்திர பேச்சாளர்கள், தேர்தல் நடத்தை நெறிமுறைகளை மீறியதாக கூறப்படும் குற்றச்சாட்டு குறித்து பதிலளிக்குமாறு காங்கிரஸ் மற்றும் பிஜேபி தலைவர்களுக்கு தேர்தல் ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

3. மக்களவைக்கு நான்காம் கட்ட தேர்தல் நடைபெறவுள்ள தொகுதிகளில் வேட்புமனு தாக்கல் இன்று நிறைவடைந்தது.

4. பீகார் தலைநகர் பாட்னாவில் ஹோட்டல் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 6 பேர் உயிரிழந்தனர்.

5. உலக கோப்பை பாரா துப்பாக்கிச் சுடும் போட்டியில், இந்தியாவின் **Mona Agarwal** தங்கப்பதக்கம் வென்றார்..

>>>>><<<<<

மக்களவை தேர்தலுக்கான இரண்டாவது கட்ட வாக்குப்பதிவு நாளை 88 தொகுதிகளில் நடைபெறவுள்ளது.

12 மாநிலங்கள் மற்றும் ஒரு யூனியன் பிரதேசம் அடங்கிய இந்த தொகுதிகளில் வாக்குப்பதிவுக்கு தேவையான பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாவட்ட தலைமையகங்களிலிருந்து மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் எழுதுபொருள் உள்ளிட்ட இதர பொருட்களை வாக்குச்சாவடிகளுக்கு கொண்டு செல்லும் பணிகள் நடைபெற்று வருவதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

கர்நாடகாவில் 14, ராஜஸ்தானில் 13, உத்தரபிரதேசம் மற்றும் மகாராஷ்டிராவில் தலா எட்டு தொகுதிகள், மத்திய பிரதேசத்தில் 6, அஸ்ஸாம் மற்றும் பீகாரில் தலா ஐந்து, மேற்குவங்கம் மற்றும் சத்திஷ்கரில் தலா மூன்று, திரிபுரா, மணிப்பூர் மற்றும் ஜம்மு-கஷ்மீரில் தலா ஒரு தொகுதிகளுக்கு நாளை வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

கேரளாவில் மொத்தம் உள்ள 20 தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

வாக்குப்பதிவின் போது, மகளிர், மாற்றுத்திறனாளிகள் சிரமமின்றி வந்து வாக்களிக்க ஏதுவாக பிரத்யேக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஒருசில இடங்களில் பசுமை வாக்குச்சாவடிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இரண்டாம் கட்ட வாக்குப்பதிவை முன்னிட்டு, பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதனிடையே மூன்றாவது கட்ட தேர்தல் நடைபெறவுள்ள 94 தொகுதிகளில் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

>>>>><<<<<

மக்களவை தேர்தல் நான்காம் கட்ட வாக்குப்பதிவுக்கான வேட்புமனு தாக்கல் இன்று நிறைவடைந்தது.

வேட்புமனுக்கள் பரிசீலனை நாளை நடைபெறும் என்றும், வேட்புமனுக்களை திரும்பப் பெற இம்மாதம் 29ஆம் தேதி கடைசி நாள் என்றும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

ஆந்திராவில் 25 தொகுதிகளிலும், தெலங்கானாவில் 17 தொகுதிகளிலும், உத்தரபிரதேசத்தில் 13 தொகுதிகளிலும், மகாராஷ்ட்ராவில் 11 தொகுதிகளிலும், மத்தியப்பிரதேசம் மற்றும் மேற்குவங்கத்தில் தலா 8 தொகுதிகளிலும், பீகாரில் 5 தொகுதிகளிலும், ஜார்கண்ட் மற்றும் ஒடிசாவில் தலா 4 தொகுதிகளிலும், மற்றும் ஜம்மு காஷ்மீரில் ஒரு தொகுதி உட்பட 96 தொகுதிகளில் இந்த தேர்தல் நடைபெறவுள்ளது.

மக்களவைத் தேர்தலோடு வாக்குப்பதிவு நடைபெறவுள்ள ஆந்திர மாநில சட்டப்பேரவை தேர்தலுக்கான வேட்புமனு தாக்கலும் இன்று முடிவடைந்தது

>>>>><<<<<

பாபாசாகேப் அம்பேத்கரையும், அவருடைய சமூகநீதியையும் காங்கிரஸ் கட்சி அவமதித்து வருவதாக பிஜேபி மூத்த தலைவரும் பிரதமருமான திரு. நரேந்திர மோடி குறை கூறியுள்ளார்.

உத்தரபிரதேச மாநிலம், ஆக்ராவில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய அவர், மத அடிப்படையிலான இடஒதுக்கீட்டை காங்கிரஸ் கட்சி அறிவித்து அம்பேத்கரின் சமூகநீதியை புறக்கணிக்கும் செயலில் ஈடுபட்டதாக குறிப்பிட்டார்.

காங்கிரஸும், அதன் கூட்டணிக் கட்சியான சமாஜ்வாதியும் உதட்டளவில் மட்டுமே பிற்படுத்தப்பட்டோர் நலன் குறித்து பேசி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த இரு கட்சிகளும் சாமான்ய மக்களின் சொத்துக்களை குறி வைத்திருப்பதாக திரு. நரேந்திர மோடி குற்றம் சாட்டினார்.

இதற்கிடையே, காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கை குறித்து பிரதமர் திரு. நரேந்திர மோடி தவறான தகவலை தெரிவித்து வருவதாக காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, பிரதமருக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், காங்கிரஸ் தேர்தல் அறிக்கை குறித்து விளக்கமளிக்க திரு. நரேந்திர மோடியை சந்திக்க விரும்புதாக கூறியுள்ளார்.

இதன் மூலம், தேர்தல் அறிக்கை தொடர்பாக தொடர்ந்து, தவறான செய்திகளை அவர் பரப்பமாட்டார் என்று அதில் தெரிவித்துள்ளார்.

ஏழைகள் மற்றும் அவர்களின் உரிமைகள் குறித்து தான் காங்கிரஸ் கட்சி தொடர்ந்து பேசி வருவதாகவும், சாமானிய மக்களின் கவலைகளை தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதாகவும் திரு. கார்கே அந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<<

காங்கிரஸ் மற்றும் பிஜேபி நட்சத்திர பேச்சாளர்கள், தேர்தல் நடத்தை நெறிமுறைகளை மீறியதாக கூறப்படும் குற்றச்சாட்டு குறித்து பதிலளிக்குமாறு தேர்தல் ஆணையம் அந்தக் கட்சிகளின் தலைவர்களுக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

பிஜேபி தலைவர் திரு. ஜெ.பி. நட்டா, காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே ஆகியோர் இந்த புகார் தொடர்பாக வரும் 29ஆம் தேதி காலை 11 மணிக்குள் விளக்கம் அளிக்க வேண்டும் என தேர்தல் ஆணையம் அனுப்பிய கடிதத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அரசியல் கட்சிகளின் நட்சத்திர பேச்சாளர்கள் அனைவரும் நடத்தை நெறிமுறைகளை பின்பற்றுவதை உறுதி செய்ய வேண்டும் என்று அதில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

பிஜேபி மூத்த தலைவர் ஒருவர் ராஜஸ்தான் மாநிலம், பன்ஸ்வாராவில் பேசிய சர்ச்சைக்குரிய கருத்து குறித்து, காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் ஆகிய கட்சிகள் அளித்திருந்த புகார்களையும் தேர்தல் ஆணையம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேபோல், கேரள மாநிலம் கோட்டயத்தில் காங்கிரஸ் தலைவர் ஒருவர் தெரிவித்த சர்ச்சைக்குரிய கருத்தை குறிப்பிட்டு, பிஜேபி புகார் அளித்திருந்ததையும் தேர்தல் ஆணையம் அந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

>>>>><<<<<

பீகார் தலைநகர், பாட்னாவில் ஹோட்டல் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 3 பெண்கள் உட்பட 6 பேர் உயிரிழந்தனர். 15 பேர் காயமடைந்தனர்.

ஹோட்டலில் உள்ள சமையல் எரிவாயு சிலிண்டர் கசிவு காரணமாக விபத்து ஏற்பட்டிருக்கலாம் என காவல்துறையினர் தெரிவித்தனர்.

தகவல் அறிந்து, தீயணைப்புத்துறையினர் விரைந்து சென்று தீயை கட்டுப்படுத்தினர்.

காயமடைந்தவர்கள் பாட்னா மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக காவல் கண்காணிப்பாளர் திரு. சந்திர பிரகாஷ் தெரிவித்துள்ளார்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் திரு. நிதிஷ் குமார் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

தில்லி மாநகராட்சியின் மேயர் மற்றும் துணை மேயர் பதவிகளுக்கான தேர்தலை நாளை நடத்துவதற்கு தடையில்லா சான்றை தேர்தல் ஆணையம் வழங்கியுள்ளது.

இந்த தேர்தலை நடத்துவதில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று மாநகராட்சிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

தேர்தல் நடத்தை நெறிமுறைகள் அமலில் இருப்பதால், மேயர், துணை மேயரை தேர்வு செய்வதற்கு தில்லி மாநகராட்சி அனுமதி கோரியிருந்த நிலையில், தற்போது அதற்கு ஒப்புதல் கிடைத்துள்ளது.

>>>>><<<<<

மாநிலங்களவைக்கு தேர்வு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு அதன் தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர் இன்று பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

திரு. தேவேந்திர பிரதாப் சிங், திரு. தேஜ்வீர் சிங், திரு. மகேந்திர பட் ஆகியோர் மாநிலங்களவை உறுப்பினர்களாக பொறுப்பேற்றுக் கொண்டனர்.

>>>>><<<<<

தீவிரவாதத்திற்கு நிதியுதவி அளிப்பதை தடுக்கவும் தகவல் மற்றும் தகவல் தொழில்நுட்பங்களை தவறாக பயன்படுத்தப்படுவதை தடுக்கவும் உலக நாடுகளுக்கு இந்தியா தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்கும் என்று தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவல் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் செயிண்ட் பீட்டர்ஸ்பர்கில் 12-வது சர்வதேச உயரதிகாரிகள் கூட்டத்தில் பங்கேற்று அவர் பேசினார்.

உலகளாவிய பாதுகாப்புக்கு தேவையான தகவல் அளிப்பதை இந்தியா உறுதி செய்வதாகவும், பொருளாதார வளர்ச்சியை உள்ளடக்கிய டிஜிட்டல் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதே இந்தியாவின் கொள்கை என்றும் அவர் குறிப்பிட்டார்.

தகவல் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு வெளிப்படையான - பாதுகாப்பான — நம்பகத்தன்மையுடன் கூடிய சர்வதேச ஒத்துழைப்பு அவசியம் என்றும் திரு. அஜித் தோவல் தெரிவித்தார்.

>>>>><<<<<

ஜி.7 நாடுகளின் கூட்டம் இத்தாலியில் நடைபெறவிருப்பதாகவும், இதில் பங்கேற்க இந்தியாவுக்கு அழைப்பு வந்துள்ளதாகவும் வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் திரு. ரன்திர் ஜெய்ஸ்வால் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த கூட்டத்தில் பங்கேற்பது குறித்து ஆலோசித்து வருவதாக கூறினார்.

ரஷ்யா பிடித்து வைத்துள்ள இந்தியர்கள் அனைவரையும் தாயகம் அழைத்து வர அந்நாட்டுடன் வெளியுறவுத்துறை உள்ளிட்ட பல்வேறு நிலைகளில் பேச்சு நடத்தியிருப்பதாகவும், ஏற்கனவே 10 பேர் இந்தியா வந்துள்ளதாகவும் திரு. ரன்திர் ஜெய்ஸ்வால் தெரிவித்தார்.

>>>>><<<<<

உத்தரபிரதேச மாநிலத்தில் உள்ள ஐந்து வனப்பகுதிகளில் புலிகள் கணக்கெடுப்பு அடுத்த மாதம் நடத்தப்படும் என்று அம்மாநில அரசு அறிவித்துள்ளது.

ஃபிலிபித் புலிகள் காப்பகத்திற்குட்பட்ட இந்த வனப்பகுதிகளில் புலிகள் கணக்கெடுப்பிற்காக 653 தானியங்கி கேமராக்கள் பொருத்தப்பட்டு, புலிகளின் எண்ணிக்கை கணக்கிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே நடத்தப்பட்ட கணக்கெடுப்பின் படி, இந்த பகுதிகளில் 71 புலிகள் இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

>>>>><<<<<

பங்களாதேஷின் பல்வேறு பகுதிகளிலும் கடந்த இரண்டு நாட்களில் விவசாயிகள் உட்பட 10 பேர் வெப்பத்தின் தாக்கத்தால் உயிரிழந்துள்ளனர்.

இந்த நிலையில், அடுத்த 3 நாட்களுக்கு அந்நாட்டில் அனல் காற்று வீசக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**Khulna** பகுதியில் உள்ள மருத்துவமனைகளில் வெப்பத்தின் தாக்கம் காரணமாக பாதிக்கப்பட்டு சிகிச்சைக்காக வருவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அனல் காற்றின் தாக்கம் காரணமாக டாக்கா உள்ளிட்ட அனைத்து நகரங்களிலும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு வரும் 27ஆம் தேதிவரை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

உலகக்கோப்பை பாரா துப்பாக்கிச் சுடும் போட்டியில், இந்தியாவின் **Mona Agarwal** தங்கப்பதக்கம் வென்றார்.

தென்கொரியாவின் **Changwon** -ல் நடைபெற்று வரும் இப்போட்டியின், மகளிர் 10 மீட்டர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

**>>>>><<<<<**

20 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று ஒரு தங்கம், ஒரு வெள்ளி, இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

துபாயில் நடைபெற்று வரும் இப்போட்டியின், ஆடவர் குண்டு எறிதல் பிரிவில் இந்தியாவின் **Anurag Singh Kaler** தங்கப்பதக்கத்தையும், சித்தார்த் சௌத்ரி வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

மகளிர் வட்டு எறிதல் பிரிவில் **Amanat Kamboj** வெள்ளிப்பதக்கத்தையும், மகளிர் 10 ஆயிரம் மீட்டர் நடைப்போட்டியில் ஆர்த்தி வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

**>>>>><<<<<**

உலக கோப்பை வில்வித்தை போட்டியில் இந்தியாவின் **Jyothi Surekha Vennam** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

சீனாவின் ஷாங்காயில் நடைபெற்று வரும் இப்போட்டியின், மகளிர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 143-142 என்ற புள்ளி கணக்கில், இந்தியாவின் **Avneet Kaur** –ஐ வென்றார்.

ஆடவர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் **Priyansh -** துருக்கியின் **Akcaoglu** –வை வென்று அரையிறுதிக்கு தகுதி பெற்றார்.

ஆடவர் குழுப் பிரிவில் இந்தியா இறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

**>>>>><<<<<**

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் பெங்களூரு இன்று ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

**>>>>>END<<<<<**